

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.11.2023) முகாம் அலுவலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, ஆகியோர் சந்தித்து, சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழமையான அணைக்கட்டும், சுமார் 19000 ஹெக்டேர் நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனம் வழங்குவதோடு, குடிநீர், மின்சார உற்பத்தி, தொழில்துறை வளர்ச்சி போன்றவற்றுக்கு முக்கிய ஆதாரமாகவும் விளங்கும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கு உலக பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்புக்காக சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையத்தால் வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் நீர்வளத்துறை தலைமை பொறியாளர் அசோகன், சிறப்பு தலைமை பொறியாளர் கண்ணன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.11.2023) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், புதுப்பிக்கப்பட்ட சட்டத்துறை செயலாளருக்கான அறையை பார்வையிட்டார். உடன் கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு எம்.பி., சட்டத்துறை செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான என்.ஆர். இளங்கோ, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் தாயகம் கவி, ஆஸ்டின், கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி முருகன், காஜா முகைதீன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### சேலம் இளைஞர் அணி மாநில மாநாட்டை விளம்பரப்படுத்த வரும்

# இருசக்கர வாகன பிரச்சாரப் பயணப் பேரணியினர் - காஞ்சி வடக்கு மாவட்டத்தில் 3 நாட்கள் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கை!

காஞ்சிபுரம், நவ.22

சேலத்தில் வருகிற டிசம்பர் 17-ஆம் தேதி நடைபெறவுள்ள கழக இளைஞர் அணி மாநில மாநாட்டை விளம்பரப்படுத்த இருச்சக்கர வாகன பிரச்சார பயணம் மேற்கொண்டுள்ள இளைஞர் அணியினர் காஞ்சி வடக்கு மாவட்டத்தில் 3 நாட்கள் சுற்றுப்பயணம் செய்து 11 இடங்களில் தெருமுனைப் பிரச்சாரங்கள் செய்கின்றனர் என்று மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

சேலத்தில் வருகிற டிசம்பர் 17-ஆம் தேதி கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாடு கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர்களின் இதயம் கவர்ந்த இளம் தலைவர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

சேலம் இளைஞர் அணி மாநில மாநாட்டை விளம்பரப்படுத்த, தென்குமரி முனையில் இருந்து இருச்சக்கர வாகன பிரச்சார பேரணியை கடந்த 15-ஆம் தேதி நம் நெஞ்சம் நிறைந்த இளைய தலைவர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அந்த இருச்சக்கர வாகன பிரச்சார பேரணி அண்ணா மண்டலத்தில் அடங்கிய நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் வருகிற நவம்பர் 24, 25, 26 ஆகிய தேதிகளில் பிரச்சாரப் பயணம் மேற்கொள்கிறது.

24ஆம் தேதி மாலை 3 மணி அளவில் திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதிக்கு இந்த இருச்சக்கர வாகன பிரச்சார பயணப் பேரணியினர் 42 மோட்டார் சைக்கிள் வாகனங்களில் பேரணியாக அணிவகுத்து வருகின்றனர். திருப்பெரும்புதூர் தொகுதி எல்லையான செட்டிபேடு அருகே இப்பேரணியினருக்கு கழகத்தினர் அணிதிரண்டு உற்சாக வரவேற்பு அளித்து ஊர்வலமாக அழைத்து வருகின்றனர்.

நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட இளைஞர் அணி சார்பாக மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ் தலைமையில் 5 மாவட்ட துணை அமைப்பாளர்கள் மோட்டார் சைக்கிள் வாகனங்களில் தலைக்கவசம் அணிந்து இப்பேரணிக்கு வழிகாட்ட, பேரணிக்கு முன்னால் அணிவகுத்துச் செல்கின்றனர்.

தண்டலம், இருங்காட்டுக்கோட்டை, பென்னலூர், சுங்கச்சாவடி வழியாக திருப்பெரும்புதூர் பேரூரை வந்தடைகின்றனர். அங்கு பிரச்சார பேரணியினர் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை விளக்கி துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கின்றனர். பின்னர்



அங்கு பிரச்சாரப் பயண தெருமுனைக் கூட்டம் நடைபெறுகிறது.

பின்னர் மாம்பாக்கம் வழியாக சுங்குவார்ச த்திரத்தை வந்தடைகின்றனர். சுங்குவார்சத்திரம் பஜாரில் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை விளக்கி துண்டுப்பி ரசுரங்களை விநியோகின்றனர். பின்னர் அங்கு பிரச்சாரப் பயண தெருமுனைக் கூட்டம் நடைபெறுகிறது.

பின்னர் அப்பேரணியினர் காஞ்சிபுரத்தில் தெருமுனை பிரச்சாரம் செய்து இரவு தங்குகின்றனர். மறுநாள் 25ஆம் தேதி காலை உத்திரமேரூர், மதுராந்தகம் ஆகிய தொகுதிகளில் இருச்சக்கர வாகன பிரச்சாரப் பேரணி மேற்கொள்கின்றனர். அன்று மாலை இப்பேரணியினர் செங்கல்பட்டை வந்தடைகின்றனர்.

செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் அருகில் இப்பேரணியினர் வந்த இருசக்கர வாகனங்களை அங்கு நிறுத்தி விட்டு வீடு மற்றும் கடைகளுக்கு சென்று துண்பிரசுரங்களை விநியோகிக்கின்றனர். அங்கு பிரச்சார பயண தெரு முனைக்கூட்டம் நடைபெறுகிறது.

அதன்பிறகு அப்பேரணியினர் சிங்கபெருமாள் கோயில், மறைமலை நகர் வழியாக கூடுவாஞ்சேரியை வந்தடைகின்றனர். கூடுவாஞ்சேரி பேருந்து அருகில் தெருமுனை பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. அப்பேரணியினர் அருகில் உள்ள வீடு மற்றும் கடைகளுக்குச் சென்று மாநாட்டை விளக்கி துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்கின்றனர். வண்டலூர் வழியாக சென்று அப்பேரணியினர் அன்று இரவு திருப்போரூரில் தங்குகின்றனர்.

அப்பிரச்சார பேரணியினர் திருப்போரூரில் இருந்து 26ஆம் தேதி காலை இரு சக்கர வாகனங்களில் புறப்படுகின்றனர். திருப்போரூர் பேருந்து நிலையம் அருகில் நடைபெறும் தெருமுனை பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பிரச்சாரம் செய்கின்றனர். அங்கு துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கின்றனர்.

அடுத்து அப்பேரணியினர், திருப்போரூர் வடக்கு ஒன்றியத்தில் அடங்கிய தையூர் சென்று அங்கு நடைபெறும் தெருமுனை பிரச்சார பொதுக் கூட்டத்தில் பிரச்சாரம் செய்து துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கின்றனர்.

பின்னர் அப்பேரணியினர் சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதிக்கு சென்று அங்கு நடைபெறும் தெருமுனை பிரச்சார பொதுக் கூட்டங்களில் பிரச்சாரம் செய்து துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கின்றனர்.

சோழிங்கநல்லூரில் பிரசாரத்தை முடித்துக் கொண்டு தாம்பரம் தொகுதிக்கு வருகை தருகின்றனர். தாம்பரம் மாநகரம்செம்பாக்கம் காமராஜபுரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெறும் தெருமுனை பிரச்சார பொதுக் கூட்டத்தில் பிரச்சாரம் செய்து துண்டுப்பிர சுரங்களை விநியோகிக்கின்றனர்.

அடுத்து அப்பேரணியினர் தாம்பரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெறும் தெருமுனை பிரச்சார பொதுக் கூட்டத்தில் பிரச்சாரம் செய்கின்றனர். அங்கு துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கி ன்றனர்.

பின்னர் அப்பரேணியினர் பல்லாவரம் தொகுதியில் அடங்கிய குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் நடைபெறும் தெருமுனை பிரச்சார பொதுக் கூட்டத்தில் பிரச்சாரம் செய்கின்றனர். அங்கு துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கின்றனர்.

அதன்பிறகு அப்பேரணியினர் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெறும் தெருமுனை பிரச்சார பொதுக் கூட்டத்தில் பிரச்சாரம் செய்கின்றனர். அங்கு துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கின்றனர்.

இறுதியாக இப்பேரணியினர் அன்று மாலை ஆலந்தூர் தொகுதி வந்தடைகின்றனர். ஆலந்தூர் மண்டித் தெருவில் நடைபெறும் தெருமுனை பிரச்சார பொதுக் கூட்டத்தில் பிரச்சாரம் செய்கின்றனர். அங்கு துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்து அண்ணா மண்டல இருசக்கர வாகன பிரச்சார பேரணியை நிறைவு செய்கின்றனர்.

எனவே இந்த இருசக்கர வாகன பிரச்சார பேரணி நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு வருகை தரும் இடங்களில் அடங்கி உள்ள நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் அவரவர் தொகுதியில் அவசியம் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும்.

அத்துடன், இப்பிரச்சார பேரணி வருகை தரும் இடங்களில் அடங்கிய மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் செயலாளர்கள் அனைவரும் இந்த இருசக்கர வாகன பிரச்சார பேரணியினரை முறையாக வரவேற்று அழைத்து சென்று தெருமுனை கூட்டம் நடைபெறும் இடத்தில் அவர்கள் ஜீப்பில் இருந்தபடியே பிரச்சாரம் மேற்கொள்வதற்கு தேவையான ஒலி பெருக்கி, விளக்கு உள்ளிட்ட வசதிகளை செய்து தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.


